**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No. 97/2023**

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.4 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 09.01.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரஞ்சித்குமார் (PW4) | வயது | : | 37/2026 |
| த/ பெயர் | : | திரு.சுப்ரமணியன் | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| முகவரி | | கருப்புகிளார் | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் தற்போது கருப்புகிளார் கிராம நிர்வாக அலுவலராக கடந்த 6 மாதங்களாக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டுமென இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அடிப்படையின்பேரில் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன்.

தாவா சொத்தானது 1 முதல் 3 வரையிலான தாவா சொத்துக்கள் கே.ஆர்.எம் எஸ்டேட் என்ற பெயரில் கருப்புகிளார் கிராம அ பதிவேட்டில் பதிவு உள்ளது. நான் தற்போது தாவா சொத்திற்கான அடங்கல், அ பதிவேடு, சிட்டா, குத்தகை பதிவு விபரங்கள் மற்றும் வரைபடம் ஆகியவை தாக்கல் செய்கிறேன். (**அந்த கிராம அடங்கல், அ பதிவேடு, சிட்டா, குத்தகை பதிவு விபரங்கள் மற்றும் வரைபடம் Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

அந்த ஊரில் உள்ள மக்களிடம் விசாரணை செய்ததில் தாவா சொத்தானது 1 முதல் 3 வரையிலான தாவா சொத்துக்கள் நடராஜன் கடந்த 30 வருடங்களாக சாகுபடி செய்து வருவதாக சொன்னார்கள்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்த குத்தகை பதிவு பிரதிவாதியின் தந்தை சந்தானம் பண்டாரம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி

அனுபவித்து வருகிறார் என்ற விபரத்தை கிராம அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தான 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களும் சாகுபடி செய்யாமல் தரிசாக உள்ளது என்று அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கருப்புகிளார் கிராம நிர்வாக அலுவலராக பணிக்கு வந்ததிலிருந்து வாதியானவர் தாவா சொத்தை சாகுபடி செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்தை நான் பார்வையிட்டதில் தரிசாக உள்ளது என்ற விபரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 30 வருடமாக வாதியானவர் தாவா சொத்துக்களை சாகுபடி செய்ததாக ஊரில் உள்ளவர்கள் சொல்லிய விபரப்படி கிராம பதிவில் எதுவும் குறிப்பில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியானவர் எப்போதும் குத்தகைதாரராக சாகுபடி செய்யவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.03 17:40:53 +0530

District Munsif
Mannargudi.